

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (07.10.2024) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2021– 22 முதல் 2024– 25 வரை அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீதான தொடர் நடவடிக்கைகள், பொங்கல் பண்டிகை 2025 க்கான வேட்டி சேலை வழங்குதல், பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் துறை சார்ந்த திட்டங்கள் முன்னேற்றம் தொடர்பான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் வே. அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர் இரா. லலிதா, மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எழும்பூரில் புதிய கட்டிடம் அடிக்கல்!

சென்னை, அக்.9-

எழும்பூர் தொகுதி, மண்டலம் 8, வார்டு எண்.108, ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், 1.25 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்திற்கு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அடிக்கல் நாட்டினார்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா!

# மண்டலம் - 5 அளவிலான இறுதி பேச்சுப் போட்டி!

### மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கை

ஈரோடு, அக். 9-

தி.மு.க. இளைஞர் அணி துணைச் செயலாளரும் 5வது மண்டலப் பொறுப்பாளருமான கே.இ,. பிரகாஷ் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி அவர்களின் வாழ்த்துக்களுடன் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி

ஐந்தாவது மண்டல அளவிலான இறுதி பேச்சுப் போட்டி தலைமை அறிவிக்கும் நடுவர்கள் முன்னிலையில் நிகழ்ச்சி திருப்பூர் தெற்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கம் திருப்பூரில் 13.10.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணி அளவில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல பத்மநாபன் தலைமையிலும்,

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், செய்தித் துறை அமைச்சர் மு.பெ சாமிநாதன், மனித வளம் மேம்பாட்டுத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ்,

மாவட்ட கழக செயலாளர்கள் சு.முத்துச்சாமி, வி. செந்தில்பாலாஜி, செல்வராஜ் எம்.எல்.ஏ., நல்லசிவம், கார்த்தி, தொண்டா முத்தூர் ரவி, தளபதி முருகேஷ், முபாரக் மாவட்ட அமைப்பாளர்கள் மு.ஜெயக்குமார். தங்கராஜ், சக்திவேல் திருவாசகம், திருவேங்கடம், சபரி கார்த்திகேயன் தன்பால், ஹக்கீம், சசிகுமார் மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள் முத்துக்குமார். எம்.எஸ். கே.ராஜூ, கே.டி.எஸ் சுதாகர், கரேத்தா பூபதி மற்றும் மாநகர துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையிலும்

சிறப்பு அழைப்பாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரசாமி, கணபதிராஜ்குமார் வணக்கத் திற்குறிய மேயர் தினேஷ்குமார். மாநகர செயலாளர்கள் டி.கே. டி.நாகராஜ், மு.சுப்பிரமணியம், எஸ்.பி.கனகராஜ், மற்றும் மண்டலம் 5 உட்பட்ட மாவட்டங்களின் மாவட்ட மாநகர, மாநில ஒன்றிய பேரூர் பகுதி நகர கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சார்பு அணியின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அவர்களும் கலந்து கொண்டு 13.10.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி மாலை வரை தொடர்ந்து நடைபெறும்.

மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அனைவரும் மாவட்ட அளவில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களை (கரூர், ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு,

திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர், நீலகிரி ஆகிய மாவட்டங்கள்) மாவட்ட மாநகர அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் காலை 9.00 மணி அளவில் திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்திற்கு பாதுகாப்பாக அழைத்து வருமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

# தி.மு.க. சட்டத்துறை நிர்வாகிகள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. சட்ட திட்டம் விதி 18, 19 பிரிவுகளின்படி, ஏற்கனவே நியமிக்கப்பட்ட தி.மு.க. சட்டத்துறை நிர்வாகிகள் பட்டியல் பின்வருமாறு மாற்றி அமைத்து அறிவிக்கப்படுகிறது.

**தி.மு.க.சட்டத்துறை**

| | | |
|---|---|---|
| தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகர் | - | வழக்கறிஞர் பி.வில்சன், பி.எஸ்சி., பி.எல்., எம்.பி. |
| கழகச் சட்டத் துறைத் தலைவர் | - | வழக்கறிஞர் ஆர்.விடுதலை, எம்.ஏ.எம்.எல். |
| சட்டத் துறைச் செயலாளர் | - | வழக்கறிஞர் என்.ஆர்,இளங்கோ, பி.ஏ.பி.எல் எம்.பி. |

சட்டத்துறை இணைச் செயலாளர்கள் - இ.பரந்தாமன், பி.ஏ., பி.எல். எம்.எல்.ஏ. கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., என், மணிராஜ், பி.ஏ, பி.எல், கரூர்கே.எம்.தண்டபாணி, பி.ஏ., பி.எல்., கோவை சு.ராதாகிருஷ்ணன், பி.காம் பி.எல். ஈரோடு பி.ஆர் அருள்மொழி, எம்.ஏ. பி.எல் கோவை. இரா. தாமரைச்செல்வன், பி.எஸ்சி.,பி.எல், தருமபுரி ஜெ.பச்சையப்பன், பி.ஏ., பி.எல். சூர்யா வெற்றிகொண்டான், எம்.ஏ., எல்.எல்.பி.

சட்டத் துறை துணைச் செயலாளர்கள் - கே.சந்துரு, பி.ஏ., பி.எல்., பெ.ரகு, சென்னை, டாக்டர் சந்திரபோஸ், சென்னை, என். மருது கணேஷ், சென்னை, எஸ்.ராஜா முகமது, எம்.ஏ. பி.எல்., திருநெல்வேலி

தலைமைக் கழக வழக்கறிஞர்கள் - கே.ஜெ.சரவணன், பி.ஏ. பி.எல்., வீ. கவிகணேசன், எம்.ஏ., பி.எல்., சென்னை, கே.மறைமலை, பி.ஏ.பி.எல்., நாகை சுவை சுரேஷ், விழுப்புரம், மனோஜ், தூத்துக்குடி, தினேஷ், நாகை, எம்.எஸ்.பி. வீரமணி, திருச்சி, மீஞ்சூர் சுரேஷ், திருவள்ளூர், கலாநிதி, மதுரை வடக்கு

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 07-10-2024.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திருவாரூரில் பொறியாளர் அணி உறுப்பினர் சேர்த்தல்!

## பூண்டி கே. கலைவாணன் பங்கேற்பு!

திருவாரூர், அக். 9 –

தி.மு.க. பொறியாளர் அணி புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் திருவாரூர் அஞ்சுகம் – முத்துவேலர் அரங்கில் நடைபெற்றது. கியூ.ஆர். கோடுமூலம்புதிதாக இணைந்த உறுப்பினர்களுக்கு மாவட்டக் கழக செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. உறுப்பினர் அடையாள அட்டைகளை வழங்கினார். நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் ஆர்.வி. எல். ரவிச்சந்திரன், மாவட்ட அமைப்பாளர் இரா.பிரபாகரன் மற்றும் பொறியாளர் அணி பொறுப்பாளர்கள் நிகழ்வில் பங்கேற்றனர் .

கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் வழிகாட்டுதலின்படியும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளின் படியும், திருவாரூரில் பொறியாளர் அணி புதியஉறுப்பினர்கள் சேர்ப்பு முகாம் நடைபெற்றது. பொறியியல் பட்டப் படிப்பு மற்றும் பட்டய படிப்பு, ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் உள்ளிட்ட படிப்பு முடித்தவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்களை தி.மு.கழக பொறியாளர் அணியில் இணைக்கும் முகாம் தலைமைக் கழக அறிவிப்பின்படி கியூ ஆர் கோட் மூலம் இணைக்கும் நிகழ்வை மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன்எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பொறியாளர் அணியில் இணைவதற்கு, தலைமைக் கழகத்தால் கொடுக்கப் பட்டி ருக்கும் தகுதிகளின் அடிப்படையில் உறுப்பினர்கள் புதிதாக இணைக்கப்பட்டனர். கியூ.ஆர். கோடு மூலம் இணைந்த புதிய உறுப்பினர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் மற்றும் நகர கழக செயலாளர் வாரை எஸ். பிரகாஷ் பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் ஆகியோர் பொறியாளர் அணிக்காண அடையாள அட்டைகளை வழங்கினர்.

நிகழ்வில் பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் இரா.கி பிரபாகரன் வரவேற்பு உரையாற்றினார். பொறியாளர் அணி மாவட்ட தலைவர் ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன் பொறியாளர் அணியின் செயல்பாடுகளையும் ஆக்கப் பணிகளையும் குறித்து பேசினார்.

விழாவிற்கு மாவட்ட பொறியாளர் அணி துணை தலைவர் ஜெ.இனியன், துணை அமைப்பாளர்கள் பி. செந்தில், எஸ்.பாலாஜி, எஸ்.விஜய் ஸ்டாலின் எஸ்.பி.எம். போஜராஜன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

### தி.மு.க. பொறியாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் நியமனம்!

### பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

**திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்**

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பி.எஸ்.சாந்தகுமார் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **கே.சுந்தர் கருணாநிதி**, பி.இ., எம்பிஏ., (எச்ஆர்), (12, 3வது குறுக்குத் தெரு, புதுத் தெரு, செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம் - 604 407) அவர்கள் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**மதுரை மாநகர் மாவட்டம்**

மதுரை மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஏ.வினோத் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **என். அருண்பாலாஜி**, டி.எம்.இ., (72/192, கோதண்டராம் தெரு, சின்னக்கடை தெரு, தெற்கு வாசல், மதுரை1) அவர்கள் மதுரை மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட அந்தந்த மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 08.10.2024.

**கு.கருணாநிதி**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

### 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகளை துரிதப்படுத்திட

# தி.மு.க. சட்டத்துறை சார்பில் அமைக்கப்படும் மாநில நிர்வாகிகள் அடங்கிய குழு

## தலைமைக் கழக அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்கள் அமைத்த "**தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு**" தி.மு.க. சட்டத்துறை செயல்பாடுகள் குறித்து மேற்கொண்ட ஆய்வின் முடிவின்படி, **முதலமைச்சர் கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி,

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்கி, சிறப்பாக செயல்படுத்திடவும் துரிதப்படுத்திடவும் தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள் அடங்கிய கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்கள் அமைக்கப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்பட்ட குழுக்களின் தலைமையில் அந்தந்த மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் தத்தமது மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் வழக்கறிஞர் அணி பணிகளை துரிதப்படுத்தி, அதன் விவரத்தை தி.மு.க. சட்டத்துறைச் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள் அடங்கிய பட்டியல்**

**கே.எஸ்.இரவிச்சந்திரன், தூத்துக்குடி மனோஜ், திருநெல்வேலி ராஜாமுகமது**

| கழக மாவட்டங்கள் |
|---|
| தென்காசி வடக்கு - தென்காசி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு,திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, தேனிவடக்கு, தேனி தெற்கு |

**ஈரோடு ராதாகிருஷ்ணன், மதுரை கலாநிதி**

| கழக மாவட்டங்கள் |
|---|
| திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், சிவகங்கை, இராமநாதபுரம். |

**ஜே. பச்சையப்பன், கே. சந்துரு**

| கழக மாவட்டங்கள் |
|---|
| சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு. |

**தருமபுரி இரா.தாமரைச்செல்வன், மருதுகணேஷ்**

| கழக மாவட்டங்கள் |
|---|
| திருப்பத்தூர், வேலூர், இராணிப்பேட்டை, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு. |

**கோவை கே.எம்.தண்டபாணி, கே.ஜே.சரவணன்**

| கழக மாவட்டங்கள் |
|---|
| நீலகிரி, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு. |

**கரூர் என்.மணிராஜ், திருச்சி எம்.எஸ்.பி. வீரமணி**

| கழக மாவட்டங்கள் |
|---|
| சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கரூர், திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய. |

**கோவை அருள்மொழி, விழுப்புரம் சுவை சுரேஷ்**

| கழக மாவட்டங்கள் |
|---|
| விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, பெரம்பலூர், அரியலூர். |

**சூர்யா வெற்றிகொண்டான், நாகை தினேஷ்**

| கழக மாவட்டங்கள் |
|---|
| தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு. |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 08.10.2024.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. இராசேந்திரன்

**அக்டோபர் 9 (2023)**



**தனது இளம் பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கி, 1970 முதல் 2002 வரையிலான 32 ஆண்டுகள் தொடர்ந்து சேத்துப்பட்டு ஒன்றியச் செயலாளர், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினர், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவர் என பல பொறுப்புகள் வகித்தவர்.**

**1989, 1996 ஆகிய இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தச்சம்பாடி ஊராட்சி மன்ற தலைவர், போளூர் வீட்டு வசதி வாரிய சங்க தலைவர், பால் கூட்டுறவு சங்க தலைவர் என பல பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.கே. சீனிவாசன்

**அக்டோபர் 9 (1989)**



**கழகத் தோழர்களால் 'தத்துவ மேதை' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.**

**ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றில் உறுப்பினர். தி.மு.கழகம் தோன்றிய ஆரம்ப நாள் முதல் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.**

**சிறுகதை எழுத்தாளர். கழகம் நடத்திய மாநாடுகளில் தலைமையேற்றும் – திறந்து வைத்தும் இருக்கிறார்.**

**1962 விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் மூன்று மாத சிறைத் தண்டனை பெற்றவர்.**

**1970 முதல் 1976 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும், மாநிலங்களவைக்குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**